9th February 1959] [Sri M. V. Sudarasanam Naidu]

போய் அவஸ்தைப்படாமல் இருக்க வேண்டியதைச் செய்ய வேண்டும். கோர்ட்டில் போனால், அவர்களுக்கு சிரமம் அதிகம். வேறு வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாது. அவசியமானால், சட்டத்தைத் திருத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.

நம் சர்க்காரில் எல்லோருக்கும் அபரிமிதமாகச் சம்பளம் கொடுக்கிறோம். இப்பொழுது கெஜெட் பதவியில்லாதவர்களுக்கு ரூ. 5 கொடுத்திருப்பதைப் பற்றி நாம் பெருமைப்பட வேண்டும். பொருளாதார நிலை சரியாக இருந்தால், நம் சர்க்கார் அதிகமாகச் செய்யும். பல தடங்கல்கள் இருக்கின்றன. ஆனாலும், இந்த ரூ. 5 உயர்வு, சர்க்காரின் வரி வசூல்களைப் பார்த்து வரும் கிராமத்திலுள்ள கர்ணம், மணியக்காரர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் குறைகளைத் தங்கள் சங்கங்களைக் கூட்டித் தெரிவித்திருக்கிறார்கள். அது விஷயம் சீக்கிரமாகக் கவனிக்கப்பட வேண்டும். இதன் நடுவில், இந்த உயர்வுத் தொகை அவர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் கிராமங்களில் திருப்தியாக வேலை செய்யாவிட்டால், ஒன்றும் நடைபெறாது. இது அரசாங்கத்திற்கும் நமக்கும் நன்றாகத் தெரியும்.

இந்த நிலச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த நில தானம் வாங்குவதில் ஆசார்ய வினோபாஜி ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். முதல் ஒன்றிரண்டு வருஷங்களில் அதிகக் கஷ்டம் இருந்தது. காட்டைக் கொடுத்தார்கள், கரம்பையைக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். இந்த விஷயத்தில், காடோ, கரம்பையோ முக்கியமல்ல. இதன் வாயிலாக ஏற்பட்ட மனமாறுதலே முக்கியமானது. ஆகவே, தானம் கொடுத்த நிலத்தின் தரத்தைக் குறித்துக் குறை கூறுவது, ஒரு குற்றமான எண்ணத்தைக் குறிக்கும் என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு அங்குல நிலத்திற்கு, ரூ. 5,000, ரூ. 10,000 செலவழித்து வழக்காடும் மக்கள், மனமுவந்து மனமாற்றத்தின் காரணமாக, நிலம் வழங்கினார்கள் என்றால், அது சாதாரணச் சாதனையல்ல. அந்தக் காலத்தில் எப்படி மகாத்மாஜி மக்களின் மனத்தை மாற்றி சுயராஜ்யப் பாதையில் இழுத்துச் சென்றார்களோ, அதே போல் இன்று வினோபாஜி மக்களின் மனமாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். (சில கனம் அங்கத்தினர்கள் : மற்ற விஷயங்களைத் தாங்கள் பட்ஜெட் விவாதத்தின்போது பேசிக் கொள்ளலாம்.) பட்ஜெட் விவாதத்தின் போதா ? சரி.

இத்துடன் என் வார்த்தைகளை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 2 p.m. to-morrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 94. *Notification issued with G.O. Ms. No. 3915, Revenue, dated 16th October 1958, regarding the withdrawal of compensation deposited in respect of certain villages transferred to Andhra State under third proviso to rule 3 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [Laid on the table under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

* 95. *Notification issued with G.O. Ms. No. 3902, Revenue, dated 15th October 1958, declaring Mahadevimangalam village as inam estate under section 4 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948.*

---

* Placed on the table of the House on 7th February 1959

[9th February 1959

* 96. *A short review of the activities of the Commercial Taxes Department for the first half-year ending 30th September* 1958.

* 97. *Statement showing the activities of the Accommodation Control Department for the half-year ending 31st December* 1958.

* 98. *Notification issued with G.O. Ms. No.* 3448, *Home, dated* 10*th December* 1958, *regarding amendment to rule* 337 *of the Madras Motor Vehicles Rules*, 1940.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

* Placed on the table of the House on 7th February 1959.